Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 212/2025 PW-5**

Name : திரு.சசிகுமார்
Father / Husband name : சீனுவாசன்
Village : ஒலக்கூர்
Age : 49
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.03.2026

Accused 1, 2 present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஒலக்கூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பலராமன் என்பவரின் கையெழுத்தும் கையொப்பமும் எனக்கு நன்கு பரிச்சியம். கடந்த 04.07.2023 அன்று ரோசணை காவல் நிலையத்திலிருந்தபோது காலை 10.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் பலராமன் நிலைய பொறுப்பிலிருந்தபோது அ.சா.1 பெருமாள் நிலையம் ஆஜராகிகொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 260/2023, U/s 294(b), 323, 324, 506(ii) IPC ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **சாட்சியின் அசல் புகார் மனு அ.சா.ஆ. 4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை எனது விசாரணைக்கு வைக்கப்பட்டதை நான் அன்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முனியன் மற்றும் ஜெயலட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ

சாட்சிகளான பெருமாள், நவீன், ஸ்ரீபிரியா, ஏழுமலை, முனுசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகளை தேட எதிரிகள் அலெக்சாண்டர், குமரேசன் ஆகியோர்கள் அன்றையதினம் 15.00 மணிக்கு மேல்பேரடிக்குப்பம் கிராம சுடுகாடு அருகில் நின்றிருந்தவர்களை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து காவல் நிலையம் அழைத்துவந்து திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்றக்காவலுக்கு ஒப்படைத்தேன். பின்னர் வழக்கில் காயம்பட்ட நவீன் என்பவருக்கு மருத்துவசிகிச்சை அளித்த உதவி மருத்துவர் சுரேஷ்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றிதழ் பெற்றேன். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு சிறப்பு உதவி ஆய்வாளர் பலராமன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது U/s 294(b), 323, 324, 506(ii) IPC ன்படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை__

அ.சா.1 புகார்தாரர் கொடுத்த புகாரை சரிவர விசாரிக்காமல், சம்பவயிடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.